பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 05 புதன்கிழமை 19.05.2021 கதிர் 195

### இனிது ரகசியம் அல்ல!

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை நிறைவேற்றுவது தொடர்பான விடயத்தில் கோட்டா அரசு பெரிய 'றிஸ்க்' எடுக்கத் தயாரில்லை என்று தெரிகின்றது.

உயர்நீதிமன்றம் செய்த பரிந்துரைகளை ஏற்று பக்கம்02

இராணுவம், பொலிஸார், புலனாய்வுத்துறையினரின்

# தடைகளைத் தாண்டி தமிழர் தாயகத்தில் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' சுடர்!



வன்னியில் இறுதிக்கட்டப் போரின்போது அரச படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகளை நினைவுகூரும் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' வடக்கு, கிழக்கில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அரச புலனாய்வுத்துறையினர் ஆகியோரின் தடைகளையும், அச்சுறுத்தல்களையும் தாண்டி உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாலை 6.15 மணியளவில் தமிழர் தாயகத்தில் வீடுகள் தோறும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடர்கள் கொழுந்து விட்டெரிந்தன. 2

## கொரோனா மரணங்கள் 1000 +

### நேற்று மட்டும் 34

இலங்கையில் நேற்று மாத்திரம் 34 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதுவே நாட்டில் நாளொன்றில் பதிவான ஆகக்கூடிய கொரோனா 2

## 2,478 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 478 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 680 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு 2

## தமிழரசுக் கட்சியின் தலைமை செயலகத்தில் மாவை தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு




யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் உயிர்நீத்த உறவுகளுக்கு சுடரேற்றி 2

## 'தமிழாராய்ச்சிப் படுகொலை' தூபிக்குள் சப்பாத்துக்களுடன் நுழைந்த இராணுவம்

### சிவாஜியை சுடரேற்ற விடாது தடுத்து அட்டகாசம்



உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாகக் கட்டப்பட்டுள்ள தூபியில் விளக்கேற்றச் சென்ற தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை 2

## நெல்லியடி பேக்கரி பணியாளர்கள் 33பேர் உள்ளிட்ட 95 பேருக்கு யாழில் கொரோனா!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 95 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 137 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 937 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 137 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 95 பேரும், கிளிநொச்சி 2

## தேவாலய மணி ஒலிக்கவிடப்பட்டு யாழ்.ஆயர் இல்லத்தில் அஞ்சலி

### முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

தேவாலய மணி ஓசை ஒலிக்கவிடப்பட்டு தீபங்கள் ஏற்றி இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருட்காலநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் அருட்தந்தையர்கள் பங்கேற்புடன் 2

## 2/3 பங்கு பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பு துறைமுக நகர சட்டத்தை நிறைவேற்ற அவசியம்

### மாற்றுவழிகளையும் பரிந்துரைத்தது உயர்நீதிமன்றம்

கொழும்பு, மே 19

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு விசேட பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த சட்டமூலம் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானது என்று 19 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கான தீர்ப்பை உயர்நீதிமன்றம் சபாநாயகருக்குச் சமர்ப்பித்திருந்தது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் சில பிரிவுகள் இலங்கை அரசமைப்புடன் முரண்படுகின்றன என்றும் உயர்நீதிமன்றம் 2

## குற்றங்கள் செய்திருந்தால் என்னைத் தூக்கிலிடுங்கள்

### சபையில் ரிஷாத் எம்.பி. தெரிவிப்பு



தான் ஏதேனும் தவறு செய்தால் தனக்கு மரண தண்டனை விதிக்குமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றும் முடிவுக்கு அரசு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவற்றுடன்தான் சில பிரிவுகளை நிறைவேற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது. அப்படிச் செய்ய முடியாவிடின் அந்த சரத்துக்களை உயர்நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளபடி மாற்றித்தான் நிறைவேற்ற வேண்டும்.

அப்படி மாற்றி நிறைவேற்ற அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

அதுதான், அரசின் நிலைப்பாடு என்றால் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அச்சட்ட மூலத்தை நிறைவேற்றமுடியும். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத் தேட வேண்டிய அவசியம் இல்லை.

அதுதான் அரசின் முடிவு.

எனவே, உயர்நீதிமன்றம் பரிந்துரைத்துள்ள மாற்றங்களுக்கு அமைய சாதாரண பெரும் பான்மையுடன் இச்சட்ட மூலத்தை நாளை அரசு நிறைவேற்றி முடிக்கும்.

உயர்நீதிமன்றம் கட்டுப்பாடு போட்டுள்ள சரத்துக்களை நீக்கி விட்டு சட்ட மூலத்தை நிறைவேற்றினாலே போதும் என்ற நிலைமை அரசுக்கு.

அப்படிச் செய்தால் அரசுத் தரப்பின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற அளவோடு விடயம் முடிந்து விடும்.

ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் போன்ற முஸ்லிம் தலைவர்களும் இப்போது 'அப்பாடா' என்று பெருமூச்சு விடுவர்.

உயர்நீதிமன்றப் பரிந்துரைப்படி சட்ட மூலத்தின் சில பிரிவுகளை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையுடன் அரசு நிறைவேற்ற முயற்சித்தால், அதற்காக தமது கட்சிகளின் எம்.பிக்கள் சிலர் மீண்டும் அரசுக்கு விலை போய், குத்துக் கரணம் அடிக்க, தாங்கள் தான் அரசியலில் மக்களின் முன் அம் மணமாக நிற்கும் கேவலம் ஏற்பட்டிருக்கும், இப்போது அரசின் முடிவால் தப்பித்தோம் என்று அவர்கள் ஏக்கப் பெருமூச்சு விடலாம்.

ஏதோ ஆளும் தரப்பும், எதிரணியும் உங்களுக்கும் வெற்றி, எங்களுக்கும் வெற்றி என்றளவில் இந்த சட்டமூல விவகாரத்தை முடித்துக் கொள்ள வேண்டியது தான்.

★ ★ ★

வழமை போல முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும், பெரும் இழுபறியுடன் தாண்டிப் போய்விட்டது.

ஆரவார அறிவிப்புகள், பந்தா அறிக்கைகள், சூடு கிளப்பும் செய்திகள் என்ற ஆரவாரங்களோடு நினைவுநாள் கழிந்த விட்டது.

எனக்கு என்னவோ, இந்த நினைவழியா நாள் பெருங் குறைபாட்டுடன் கடந்து போனது போல ஓர் உணர்வு.

வெறுமனே தலைவர்களின் – அல்லது தலைவர்கள் எனத் தம்மை நினைத்துக் கொள்பவர்களின் – பந்தா மட்டுமே காட்டப்பட்ட நிகழ்வாகவே இது முடிந்திருக்கின்றது.

உணர்வு பூர்வமாக மக்கள் – நம் தமிழ் மக்கள் – தங்கள் மனதில் இந்நாளை நிறுத்தி, எழுச்சியுடன் நினைவேந்தலை மனதளவிலேனும் முன்னெடுத்தனர் என்ற திருப்தி எனக்கு வரவில்லை.

நெருக்கடிகள், அழுத்தங்கள், படை அச்சுறுத்தல்கள் மத்தியில் தமிழ் மக்களின் பல உணர்வெழுச்சி நிகழ்வுகளை எனது பத்திரிகைத்துறை வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன். மக்களுடன் கலந்து நின்று அவற்றைத் தரிசித்துத் தாண்டி, பட்டெழுந்து வந்திருக்கிறேன்.

ஆனால், இந்த நினைவேந்தல் மக்களில் இருந்து தொலைதூரத்துக்கு அந்நியமாகிப் போய் விட்டதோ என்ற அச்ச உணர்வுதான் – அதிருப்தி உணர்வுதான் – மேலோங்கி நிற்கின்றது.

வரலாற்றுப் பேரழிவின் நினைவேந்தலுக்குக் கூட ஒன்றுபட்டு அழைப்பு விடுக்க முடியாத சுயநலத்தலைமைகளின் மத்தியில் இப்படித்தானாகும்.

இந்த வேதனையை இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம்.

யாரோ பட்ட வேதனைகளை யாரோ அரசியலாக்கும் சுயநலத்தினால்தான் இது விளைந்ததோ...? தெரியவில்லை.

சரியான திசையில் நாம் நகரவில்லை என்பது மட்டுமே இப்போதைக்குப் புரிகின்றது. அவ்வளவுதான்.

– மின்னல் –

## 2/3 பங்கு பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

அரசமைப்புடன் முரண்படும் பகுதிகளைச் சீர்திருத்த முடியுமான விதம் தொடர்பாகவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு 62 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியன்த ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டியவை, அத்தோடு சர்வஜன வாக் கெடுப்பு மூலம் மக்களிடம் அனுமதி பெறப்பட வேண்டியவை, அதற்காகச் செய்யப்படக் கூடிய மாற்று வழிகள் என்பவை எல்லாம் இத்தீர்ப்பில் உயர் நீதிமன்றினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## தடைகளைத் தாண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்க 'ஸூம்' தொழில்நுட்பம் ஊடாக மக்களை ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார். அதற்கமையவும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் சிலர் அங்குள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தில் நேற்றுக் காலை தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

யாழ். மாநகர சபையில் மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அங்கு விளக்குகளை ஏற்றி மாநகர உறுப்பினர்கள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்திலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனது இல்லத்திலும், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நந்திக்கடல் பகுதியிலும், வேலர் சுவாமிகள் முள்ளிவாய்க்காலிலும் அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கிழக்கிலும் அரச படைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று நடத்தப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நாடாளுமன்ற வளாகத்திலும் நேற்று அஞ்சலி செலுத்தினர். கறுப்பு உடைகளை அணிந்து அவர்கள் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். அவர்கள் சபை நடவடிக்கைகளிலும் கறுப்பு உடையிலேயே கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இரா.சாணக்கியன், தவராசா கலையரசன் மற்றும் கோவிந்தம் கருணாகரன் ஆகியோர் நேற்றைய அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 6 மணி நேரம் வீதியில் காத்திருந்து பின் வீடு திரும்பிய தொற்றாளர்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் என இனங் காணப்பட்ட ஆறுபேர் 7 மணி நேரம் வீதியில் காவல் நின்றபோதும் ஏற்றிச் செல்ல வாகனம் இன்மை காரணமாக வீடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர் என அப் பகுதி மக்கள் சிலர் குற்றம் சாட்டுகின்றனர்.

இருட்டுமடுக் கிராமத்தைச் சேர்ந்த ஆறுபேருக்கு நேற்று முன்தினம் கொரோனா உறுதி செய்த நிலையில் நேற்றைய தினம் வைத்தியசாலைக்கு ஏற்றும் பணி இடம்பெற்றது. இவ்வாறு ஏற்றிய சமயம் இருட்டுமடுவைச் சேர்ந்த ஆறுபேரையும் ஒரே இடத்தில் நிற்குமாறு அடையாளப் படுத்தி ஓர் இடத்தைக் கூறியதற்கு அமைய பகல் 12 மணியில் இருந்து மாலை 6 மணிவரை காத்திருந்த போதும் வாகனம் வரவில்லை. அவர்களை நாளைய தினம் (இன்று) ஏற்றுவதாகக் கூறித் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டு கேட்ட போது –

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு கீழ் தற்போது நான்கு பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களே பணியாற்றுகின்றனர். அதேநேரம் ஒரே நாளில் 321 பேருக்கு கொரோனா தொற்று. ஏற்றுவதற்கு வழங்கப்பட்டது பெரிய பஸ். அதனச்ல் சிறு வீதிகளில் பயணிக்க முடியவில்லை. இதேநேரம் இருட்டுமடுவின் வீதி மோசமாக சேதமும் அடைந்துள்ளது. இந்தனைக்கும் மத்தியிலேயே பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் ஒரே நாளில் ஏற்றப்பட்டுள்ளனர்.

இதேநேரம் மிகுதியானோர் புதன் கிழமை (இன்று) ஏற்றுவதற்கு பஸ்ஸூடன் பிக்கப் வாகனமும் வருவதனால் மிகுதி அனைவரும் ஏற்றிச் செல்லப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தேவாலய மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டமை குறிப்பிடக்கது.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மரண எண்ணிக்கையாகும்.

இதற்கமைய நாட்டில் பதிவான மொத்தக் கொரோனா உயிரிழப்புகள் எண்

## நெல்லியடி பேக்காரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தில் 31 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பேரும் என 137 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 2 பேருக்கும், ஒட்டுச்சுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 31 பேருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (அவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர். சிலர் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபடுபவர்கள். ஏனையோர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.)

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், மாவட்ட பொது வைத்தியசாலையில் 2 பேருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 8 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும், கோப்பாய் வைத்தியசாலையில் இருவருக்கும், தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 36 பேருக்கும் (நெல்லியடி வெதுப்பகம் ஒன்றில் 33 பேரும், நெல்லியடி வர்த்தகர்கள் மூவரும் அடங்குகின்றனர்), தெல்லிப்பழை அந்தோனிபுரம் கிராமத்தில் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்ட 17 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## குற்றங்கள் செய்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ரிஷாத் பதியுதீன் எம்.பி. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று நாடாளுமன்றில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு கருத்துத் தெரிவித்த அவர், தான் கைதுசெய்யப்பட்டு 22 நாட்களுக்கு மேல் சென்றுள்ளபோதும் இதுவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைதுசெய்துள்ளமையானது ஒரு பழி வாங்கும் நடவடிக்கை எனவும் அவர் சபையில் மேலும் குறிப்பிட்டார்.

## 2, 478 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலட்சத்து 21 ஆயிரத்து 145 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 25 ஆயிரத்து 520 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## 'தமிழாராய்ச்சிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி அட்டகாசம் புரிந்துள்ளனர்.

'முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி குறித்த நினைவுத் தூபியில் சிவாஜிலிங்கம் சுடரேற்ற முயன்ற போது அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர்.

அதனையும் மீறி தூபி இருந்த வளாகத்தினுள் சென்று சிவாலிங்கம் விளக்கேற்ற முயன்றபோது, சப்பாத்துக் கால்களுடன் இராணுவத்தினர் அதனுள் சென்று சுடரேற்ற விடாது சிட்டிகளைப் பறிக்க முயன்றும், அதனைத் தட்டி விடவும் முயன்றனர்.

அதனால் அவ்விடத்தில் இராணுவத்தினருக்கும் சிவாஜிலிங்கத்திற்கும் இடையில் நீண்ட வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அவ்விடத்துக்கு வந்த பொலிஸார், சிவாஜிலிங்கத்தின் அடையாள அட்டையின் இறுதி இல்லக்கத்தின் பிரகாரம் நேற்று வெளியில் செல்ல முடியாது எனவும், அதனால் கொரோனா நோய் சுகாதார கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்வோம் எனவும் மிரட்டி அவரைத் திருப்பி அனுப்பினர்.

# மக்களைப் பாதுகாக்கவே புலிகளுடன் போரிட்டோம்

## நாடாளுமன்றில் மஹிந்தர்



பொதுமக்களை விடுவிக்கும் நோக்கிலேயே இறுதிக் கட்ட போர் முன்னெடுக்கப்பட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்களை மீட்கும் நோக்கில் போர் புரிந்தோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறைவு தொடர்பில் நாடாளுமன்றில் விசேட உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட போர்க்கால படைத் தளபதிகள் அனைவரும் வழங்கிய பங்களிப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராட்டினார்.

படையினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறேன் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு பயணத்தடை புருணை அரசும் விதித்தது

இலங்கை உள்ளிட்ட மேலும் மூன்று தெற்காசிய நாடுகளுக்கு புருணை பயணத்தடை விதித்துள்ளது.

தெற்காசியா முழுவதும் கொவிட் தொற்று அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு புருணை பயணத்தடை விதித்துள்ளது.

மே 17 ஆம் திகதி முதல் இந்த தடை அமுலாகியது என அந்நாட்டு பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொவிட் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில், கடந்த 13 ஆம் திகதி முதல் இந்தியாவிற்கும் புருணை பயணத்தடை விதித்திருந்தது.

இதன்படி, குறித்த ஐந்து நாடுகளில் இருந்து முன் அங்கீகரிக்கப்பட்ட விமானங்கள் வழியாக புருணைக்குள் நுழைவதற்கு முன் அனுமதி வழங்கப்பட்ட வெளிநாட்டினருக்கும் பயணத்தடை பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த ஐந்து நாடுகளிலிருந்து புறப்படும் இராஜதந்திர கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் மற்றும் ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று புருணை அரசாங்கம் அறிவித்துள்ளது.

# அடையாள அட்டை அடிப்படையில் மட்டக்களப்பில் பயணக் கட்டுப்பாடு






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் நகர் பகுதிகளில் பொது மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கடந்த திங்கட்கிழமை காலை முதல் பொலிஸார் அடையாள அட்டைப் பரிசோதனையினை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஒற்றை எண்னைக்கொண்ட நாள்களில் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை ஒற்றை இலக்கமாகக் கொண்டவர்களும், இரட்டை எண்னையுடைய நாள்களில் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை இரட்டை இலக்கமாகக் கொண்டவர்களே வெளியே செல்ல முடியும். பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள இந்தக் காலகட்டத்தில் அத்தியாவசியத் தேவைகளின் பொருட்டு வெளிச்செல்ல முடியும் என இதன்போது பொலிஸார் அறிவித்தல் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவ பிரசன்னத்துடன் நடந்தது வற்றாப்பளை கண்ணகி தீர்த்த நிகழ்வு





கொவிட் தொற்று காரணமாக வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கலுக்கு உப்பு நீரில் விளக்கேற்றுவதற்கு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு பலத்த இராணுவ,பொலிஸ் பிரசன்னத்துடன், கட்டுப்பாடுகளுடன் இடம்பெற்றுள்ளது.

வருடந்தோறும் முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலிலிருந்து நடையாக சிலவத்தை தீர்த்த கரைக்கு சென்று கடலில் உப்புநீரில் விளக்கேற்றுவதற்காக தீர்த்தம் எடுப்பது வழமை .

ஆனால் இந்த வருடம் அவ்வாறு அல்லாமல் மட்டுப்படுத்தபட்டவர்கள் மாத்திரம் தீர்த்தம் எடுப்பதற்காக அனுமதிக்கப்பட்டு, உழவியந்திரத்தில் சென்று தீர்த்தம் எடுத்து வந்தனர். இந்த தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் நூற்றுக்கணக்கான இராணுவம் ,பொலிஸ் பிரசன்னமாகியிருந்தனர்.

வீதிகள் தோறும் மக்கள் கும்பங்கள் வைத்து தேங்காய் உடைக்க இராணுவம் ,பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. இன்றிலிருந்து எதிர்வரும் 24.05 திங்கள் வரை முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் உப்புநீரில் விளக்கெரியும் அதிசயம் இடம்பெற்று 24 ஆம் திகதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி விசாக பொங்கல் இடம்பெறவுள்ளது. கொவிட் பரவல் காரணமாக இம்முறை வைகாசி விசாக பொங்கலுக்கு மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதோடு சடங்குகள், பூசைகள் மட்டும் இடம்பெறவுள்ளன.

# வவுனியாவில் அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் பயணம் செய்ய பொலிஸார் அனுமதி





வவுனியாவில் அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் பயணத்தை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டில் அதிகாலை 4 மணி முதல் இரவு 11 வரை அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட பயண அனுமதிகள் நாடு பூராகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வவுனியா மாவட்டத்தில் அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் மக்களின் நடமாட்டத்துக்குப் பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர்.


0,2,4,6,8 என்பவற்றை அட்டையாள அட்டையின் இறுதி இலக்கமாக கொண்டவர்களுக்கு மட்டுமே பயணத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வவுனியாவின் பொலிஸ் சோதனைச் சாவடிகள் மற்றும் விசேட இடங்களில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அடையாள அட்டை இலக்கத்தை பரிசீலித்து பயணத்தை மேற்கொள்ள அனுமதித்திருந்தமையுடன், இறுதி இலக்கம் ஒற்றை எண்ணில் வருபவர்களுக்கு பயணத் தடை விதித்து வீடுகளுக்கு திருப்பி அனுப்பியிருந்தார்கள்.

அந்தவகையில், குழுமாட்டு சந்தி, புதிய பஸ் நிலையம், குருமன்காடு, பூந்தோட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (100)

# வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கல்







வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 15 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அரசாங்கத்தால் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு பொதிகள் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட பொதிகளை பிரதேச செயலகத்தின் சிறுவர் பெண்கள் பிரிவைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர்கள் முன் வந்து அதனைப் பெற்று தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி வைத்தனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெளிக்குளம், தச்சங்குளம், மரக்காரம்பளை, நெளுக்குளம், கந்தபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கே அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய குறித்த பொதிகள் வழங்கப்பட்டிருந்தன. (100)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொலிஸ் அடாவடித்தனம்

பேரவலத்தில் சிக்குண்டுள்ளது தமிழினம்.

உரிமைகளுக்காகப் போராடிய தமிழர்கள் இன்று கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவேந்துவதற்காகப் போராட வேண்டிய துர்ப்பாக்கியத்துக்குள் மாட்டியுள்ளனர்.

பௌத்த – சிங்களப் பேரினவாதத்தின் நஞ்சசீலப் போக்கின் கீழ் இலங்கை தீவில் அழுவதும், உறவுகளை நினைத்து, நினைவேந்தி விளக்கேற்றுவதும் பெருங்குற்றங்களாகி விட்டன.

அத்தகைய பெரும் கொடூர அடக்குமுறைக்குள் தமிழர்கள் வசமாக மடக்கப்பட்டிருக்கின்றார்கள்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இரத்த வெறியுடன் பேயுருக் கொண்டு சந்நதமாடிய பேரினவாதத்தினால் பல்லாயிரம் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரம் பேர் அங்கவீனர்களாகினர். பல்லாயிரம் பேர் ஏதிலிகளாகவும், அநாதைகளாகவும், விதவைகளாகவும் அலையும் துர்ப்பாக்கியத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். பல நூற்றுக் கணக்கானோர் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டனர். படையினரிடம் சரணடைந்தவர்களும் இல்லாமலாக்கப்பட்டனர். தமிழர்களின் உடைமைகள், சொத்துக்கள், வாழ்வாதாரங்கள், அடிப்படைக் கட்டுமானங்கள் யாவும் கணக்குவழக்கின்றி தகர்த்தழித்து நாசமாக்கப்பட்டன. தமிழரின் தாயகம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, சூறையாடப்பட்டு, அபகரிக்கப்பட்டது

சிங்களத்தின் இந்த மிருகத்தனமான கொடூர நடவடிக்கைகளில் கொல்லப்பட்டோரை அவர்களது உறவுகள் நினைவு கூரக் கூட இந்தத் தீவில் இடமில்லை. அவ்வளவு தூரம் சிங்களத்தின் இனவெறிப் போக்கு மிக மோசமானதாக – படுபயங்கரமானதாக – உள்ளது.

அதனை நேற்றும் கூட தொடர்ந்து எதிர்கொண்டு துன்பப்படும் துர்ப்பாக்கியம் தமிழர்களுக்கு. பேரினவாத அரசின் சிங்கள வெறித்தன ஆக்கிரோஷத்தை – வக்கிரத்தை – நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் மீண்டும் ஒரு முறை எதிர்கொண்டு துவளும் பட்டறிவு நேர்ந்திருக்கின்றது.

தற்போதைய தொற்றுப் பரவல் கட்டுப்பாடு, சுகாதார ஒழுங்கு விதிகள் ஆகியவற்றை மீறாமலும் –

பயங்கரவாதத்தை ஊக்குவிக்காத வகையிலும் –

நினைவேந்தலை நடத்துவதற்குத் தடை ஏதுமில்லை என்பதை நீதிமன்றமே உறுதிப்படுத்திய போதிலும், பௌத்த, சிங்களப் பேரினவாத அரசின் 'கைத்தடியான' பொலிஸ் மட்டும் தன் புத்தியை – சிங்களப் பேரினவாத வெறிப் போக்கை – காட்டத் தவறவில்லை.

மட்டக்களப்பிலும், வாழைச்சேனையிலும் தமது உறவுகளுக்காக விளக்கேற்றி, நினைவேந்தலில் ஈடுபட்டோரை விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்து காவலுக்குள் கொண்டு வந்திருக்கின்றது பொலிஸின் இனவாத வெறித்தனம்.

உறவுகளை நினைவேந்திய குற்றத்துக்காக 'பயங்கரவாதிகள்' ஆக்கப்பட்டிருக்கின்றனர் அப்பாவிப் பொதுமக்கள். இனி என்ன?

இந்த நாட்டின் மிருகத்தனமான – மிகக் கொடூரமான – மனிதாபிமானமேயற்ற – மனிதப் பண்பியல்புகளுக்கு ஒத்துவராத – கேடு கெட்ட – சட்டமுறைமை என்று வர்ணிக்கப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றிக் கட்டவிழ்த்து விடும் காவல்துறை என்ற பெயரில் இயங்கும் இனவாதக் கட்டமைப்பு.

கொல்லப்பட்ட தங்களின் உறவுகளுக்காக நினைவேந்தல் செய்வதும் 'பயங்கரவாதமாக' சித்திரிக்கப்படக் கூடிய வக்கிரம் நிறைந்த ஓர் ஆட்சிக் கட்டமைப்பின் கீழ் சிக்குண்டு, அடிமைப்படுத்தப்பட்டு, அடக்கி, ஒடுக்கப்படுகின்றது தமிழினம்.

செத்த உறவுகளுக்காக நினைவேந்தலைக் கூட சகிக்க முடியாத கொடூர ஆட்சிதான் இங்கு தொடருகின்றது என்பதை சர்வதேசம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கைத் தீவில் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை குறித்து நீதி, நியாயமான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட்டு, மீள் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

ஆனால், தமிழர்கள் தமது செத்த உறவுகளுக்காக விளக்கேற்றி அஞ்சலித்து, நினைவேந்துவதற்குக் கூட அனுமதிக்க முடியாது என்ற வக்கிரபுத்தியில் சிங்கள, பௌத்த பேரினவாத வெறிப்போக்கு ஆட்சிப் பீடம் தொடர்ந்தும் உறுதியாகப் பயணிக்கையில் சர்வதேசத்தின் இந்த எதிர்பார்ப்பு பகல் கனவே என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

சர்வதேசத்துக்கு இது புரிந்தால் சரி.

# யுத்தத்தில் பல்லாயிரம் பொதுமக்களும் இறந்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது

### நாடாளுமன்றில் பிரதமரிடம் சுமந்திரன் தெரிவிப்பு!



இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது ஆயிரக் கணக்கில் பொதுமக்களும் இறந்தார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க் கிழமை) உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இறந்தமையை நினைவுப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில், பிரதமரின் உரையை அடுத்து அதற்கு பதில் வழங்கும்படியாக கருத்து வெளியிடும்போதே எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்–

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது உரையின்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இறந்தமையை நினைவுபடுத்தியிருந்தார்.

இதில் பொதுமக்களும் உள்ளடங்கு கிறார்கள். பல்லாயிரக்கணக்கான பொது மக் கள் இன்றைய நாளில் கொல்லப்பட்டார்கள். படையினர் மட்டுமன்றி பொது மக்களும் புலிகளும் இறந்தார்கள் என்பதை நான் சபையில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்" – எனத் தெரிவித்தார்.

# இலங்கையில் உண்மையான தாக்கம் இரண்டு வாரங்களில் உணரப்படுமாம்

### பயணத் தடையால் பயனில்லை என்றும் தெரிவிப்பு

கொழும்பு,மே19

கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலையின் உண்மையான தாக்கம் இலங்கையில் அடுத்த இரண்டு வாரங்களில் உணரப்படும் என சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் அண்மையில் விதிக்கப்பட்ட பயணத்தடை இலங்கையில் தொற்றைக் குறைக்க உதவவில்லை என்றும் அச்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக பயணத் தடையின் போது நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனைகள் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் சோதனைகளுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்பட்டதாகவும் அச்சங்கத்தின் தலைவர் பாலசூரிய தெரிவித்தார்.

அந்தவகையில் வார இறுதியில் நடத்தப்பட்ட சோதனைகள் குறைவாக இருப்பதால் அடுத்த சில நாள்களில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இலங்கையின் உண்மையான கொரோனாத் தொற்று நிலைமை அடுத்த ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் மட்டுமே வெளிப்படும் என்றும் பாலசூரிய குறிப்பிட்டார்.

# குற்றம் செய்திருந்தால் என்னை தூக்கிலிடவும்!

### நாடாளுமன்றில் ரிஷாத் சவால்



தான் ஏதேனும் தவறு செய்தால் தனக்கு மரண தண்டனை விதிக்குமாறு நாடாளு மன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அவருக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு கருத்து தெரிவித்த அவர் –

தான் கைது செய்யப்பட்டு 22 நாள்களுக்கு மேல் சென்றுள்ளபோதும் இதுவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஈஸ்டர் தாக்குதலுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத தன்னை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து இவ்வாறு பழிவாங்கல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

# நூறு அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து; இருவர் காயம்



நுவரெலியா – இராகலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இராகலை சூரியகந்தை பகுதியில் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயம் அடைந்து நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அக்கரைப்பற்று பகுதியிலில் இருந்து ஹற்றன் பகுதிக்குச் சென்ற கார் ஒன்று நுவரெலியா – வலப்பனை பிரதான வீதியில் இருந்து வீதியை விட்டு விலகி கார் சுமார் 100 அடி பள்ளத்தில் உள்ள நுவரெலியா இராகலை பிரதான வீதிக்கு பாய்ந்து விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

காரில் இரண்டு பேர் பயணித்து உள்ளனர். இருவரும் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக இராகலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்த் தேசிய இனத்தின் மீது சிங்கள தேசிய இனம் பகிரங்கமானதோர் இன அழிப்பை மேற்கொண்டது!

## நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. காட்டமான உரை

இந்த நாட்டில் நடைபெற்றது பகிரங்கமானதோர் இனவழிப்பு. தமிழ்த் தேசிய இனத்தின் மீது சிங்கள தேசிய இனம்தான் அந்த அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை நாங்கள் காலங்காலமாக வலியுறுத்துகின்றோம்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாகிய நேற்று அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய காட்டமான உரையின் முழுமையும் வருமாறு –

இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த ஈழத் தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத நாள் இன்றைய நாள். இன்று (நேற்று) காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட இந்த நாட்டில் நடந்த யுத்தத்தைத் தாங்கள் வெற்றி கொண்டோம் எனவும் வெற்றியின் மூலம் இந்தநாட்டைத் தாங்கள் கைப்பற்றியுள்ளோம் என்றும் குறிப்பிட்டாரே தவிர, யுத்தத்துக்குப் பின்னர் சமாதானத்தை வெல்வது பற்றியோ சமாதானத்தைக் கட்டிவளர்ப்பது பற்றியோ அவரால் இங்கு எதுவும் கூற முடியவில்லை.

70 ஆண்டுகளாக இந்த மண்ணிலே இனப்படுகொலை நடந்தாலும், 12 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மண்ணிலே பல்லாயிரக் கணக்கானமக்கள் கொல்லப்பட்டார்கள். அழிக்கப்பட்டார்கள். அதை மறைந்த ஆயர் இராஜப்பு ஜோசப் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன் தனது சாட்சியங்களாகப் பதிவுசெய்துள்ளார். இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவு 12 ஆண்டுகளைக் கடந்துவந்தாலும்கூட – தமிழர்கள் நினைவுகூருவதற்குக்கூட – அந்த நினைவுத் தூபிக்குச் சென்று நினைப்பதற்குக்கூட – தடுக்கப்படுகின்ற ஒரு நாளாக இந்தநாள் அமைந்துள்ளது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் எமது மக்கள் நினைவுகூருகின்ற நினைவிடத்தைக்கூட அடித்து நொருக்கியிருக்கின்றார்கள். அந்த நினைவுத்தூபி அமைவிடத்தில் அதனைச் சூழவுள்ள பகுதியில் உள்ள சப்பாத்து அடையாளங்கள் இராணுவத்தினரின் சப்பாத்து அடையாளங்களாக ஊடகங்களில் காட்டப்பட்டுள்ளன.

இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக இந்த மண்ணிலே தமிழர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்களின் நிலங்களிலே இருந்து அவர்கள் இடம்பெயர்க்கப்பட்டார்கள். மீண்டும் அவர்கள் குடியமரத் தடுக்கப்பட்டார்கள். இந்த அரசாங்கம் மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும்கூட இதைத்தான் தமிழர்களுக்குச் செய்துள்ளது.



1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசு ஆட்சிப்பொறுப்பைக் கைப்பற்றியபோதும்கூட 1980, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் இலக்கு வைக்கப்பட்டு தமிழர்களின் கடைகள், படித்தவர்கள்கூட நேரடியாக ஓர் இனவழிப்பு செய்யப்பட்டது. குறிப்பாக ஸ்ரீ மத்தியு தலைமையில் கொழும்பின் நகரப் பகுதிகளும் ரணசிங்க பிரேமதாஸ தலைமையில் 4 ஆம் குறுக்குத் தெருவிலும் காமினி திஸநாயக்க தலைமையில் மலையகப் பகுதிகளிலும், அத்துலத் முதலி தலைமையில் வர்த்தகர்களை நோக்கியும் தமிழர்களை அழிக்கின்ற நடவடிக்கைகள் இந்த மண்ணிலே நடந்து முடிந்தன.

இதற்குப் பிற்பாடு மாறிவந்த அரசாங்கங்கள் உச்சமான ஓர் இன அழிப்பை மேற்கொண்டன. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் – கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலராகச் செயற்பட்ட காலத்தில் – இன்றைய ஜனாதிபதி கோட்டாவின் தலைமையில் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 மே வரைக்கும் இந்த மண்ணிலே தமிழர்கள் கொத்துக்கொத்தாக அழிக்கப்பட்டார்கள். பல குழந்தைகள் சிதறிக் கொல்லப்பட்டார்கள். பாதுகாப்பு அரண்கள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லுமாறு கூறி, கோவில்கள், வைத்தியசாலைகள் போன்ற பகுதிகளுக்கு நீங்கள் அங்கே செல்லுமாறு வானொலி, தொலைக் காட்சிகளில் அறிவிக்கப்பட்டும்கூட அங்குவைத்து அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறாக இந்த மண்ணிலே பல கொலைகள் நடைபெற்றன. எனது மண்ணில் நடந்த அவலத்தைக் கூறுவதற்குக்கூட என்னை விடுகிறார்கள் இல்லை. எனக்குத் தரப்பட்ட நேரத்தைக்கூட மற்றவர்கள் பறித்துவிடுகின்றார்கள். இன்று எனது அலுவலகத்தைச் சூழ இராணுவம் நிற்கின்றது. பொலிஸார் படமெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய மண்ணிலே நாங்கள் வணக்கம் செலுத்தமுடியாத இனமாக இருக்கின்றோம். இவ்வளவுதூரம் நாங்கள் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த நாடாளுமன்றத்தில்கூட சில வார்த்தைகளைப் பேசமுடியாமல் நிற்கின்றோம். எவ்வளவு அநியாயத்துக்குட்பட்ட நாடாக நாம் இருக்கின்றோம்.

ஆகவே, இந்த நாட்டில் நடைபெற்றது பகிரங்கமானதோர் இனவழிப்பு. தமிழ்த் தேசிய இனத்தின் மீது சிங்கள தேசிய இனம்தான் அந்த அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை நாங்கள் காலங்காலமாக வலியுறுத்துகின்றோம். இது உண்மையானதும்கூட. இது பொய் என்றால், இந்த நாட்டில் ஒரு போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கு ஏன் நீங்கள் தயங்குகின்றீர்கள்? யுத்தக் குற்றத்தில் நீங்கள் ஈடுபடவில்லை என்றால் சர்வதேச ரீதியான போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கு ஏன் நீங்கள் தயங்கி நிற்கவேண்டும்? ஏன் பின்னடிக்கவேண்டும்? 12 ஆண்டுகள் கடந்தும் கொல்லப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்காகவும் காணாமல் போனவர்களுக்காகவும் நாம் கண்ணீர் சிந்துகின்றோம். அஞ்சலி செலுத்துகின்றோம். இந்த நாள் எங்களின் உரிமைக்குரிய நாள். இந்த நாளிலே நாம் கொல்லப்பட்டோம். இந்த உலகப் பந்திலே அழிக்கப்பட்டோம். எம்மை இந்த உலகப் பந்திலே இல்லாமல் செய்வதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இன்று காலை பிரதமரால் சொல்லப்பட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. பொய்யானவை. இந்த நாட்டிலே நடந்த விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டிலே புரியப்பட்ட அநியாயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. சனல் – 4 உண்மையைச் சொல்லுகின்றது. இன்று எத்தனையோ தொலைக்காட்சிகள் உண்மைகளை வைத்திருக்கின்றன. இந்த இனவழிப்பு தொடர்பில் ஒரு சிங்கள எம்.பி. கூட மன்னிப்புக்கோரவில்லை. அதற்கான தகுதி உங்களுக்கு இருக்கின்றதா? இந்த இனவழிப்பை உயர்ந்த சபையாகிய நாடாளுமன்றில் பதிவுசெய்வதற்காக நான் மிகவும் பொறுப்போடும் கூருணர்வோடும் எமது மக்கள் சார்பாக இந்த விடயத்தை நான் இங்கு பதிவுசெய்கின்றேன். – என்றார்.

# ஒட்சிசன் தேவைகளை கூறினால் இனவாதியா?

## சாணக்கியன் சபையில் ஆதங்கம்

மக்களின் மருத்துவ தேவைகளை எடுத்துக்கூறியதால் தான் இனவாதியா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

கிழக்கு மாகாணத்தில் 1,000 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 500 மாதிரிகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 200 கொரோனா நோயாளிகள் உள்ளனர். 52 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒட்சிசன் வழங்குவதற்கான வசதிகள் இல்லை. நோயாளர் அம்புலன்ஸுக்காக 19.4 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாண மக்களுக்கு ஏன் நீங்கள் வேற்றுமை காட்டுகின்றீர்கள்?– எனக் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர், இன்று அரசாங்கத்தால் கொரோனா ஒழிப்பிற்குத் தேவையான நிதி வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.



நாங்கள் பி.சி.ஆர். பரிசோதனை வசதிகளை அதிகரிக்கவுள்ளோம். பரிசோதனைக் கூடங்களை அதிகரிக்கவும், 24 மணித்தியாலங்கள் வரை சேவையில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளோம்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதானால் நாங்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றோம்.' எனக் குறிப்பிட்டார்.

இதற்கு பதில் வழங்கிய சாணக்கியன், 'பிரதமர் கூறிய வார்த்தையை கூட நீங்கள் கேட்கவில்லை. காத் ஆய்வகம் என்று கூறியவுடன் என்னை இனவாதி என்றார். பிரதமருக்கு வழங்கிய அறிக்கையைக் கூட நீங்கள் நிறைவேற்றவில்லை. இனவாதத்தை நான் அல்லன் நீங்கள் தான் தூண்டுகின்றீர்கள்' எனக் குறிப்பிட்டார்.

# இராணுவம், பொலிஸ் சூழ்ந்திருக்க வல்வெட்டி துறையில் சிவாஜி அஞ்சலி

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறையில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று உயிர் நீர்த்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தினார்.

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று பல இடங்க ளில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிலையில் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றபோது அதிகளவிலான இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சூழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழரசு கிளிநொச்சி பணிமனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து, தமிழரசுக் கட்சியும் நினைவேந்தல் நிகழ்வை நேற்று (செவ்வாய்க் கிழமை) நடத்தியுள்ளது.

தமிழரசுக் கட்சி, தனது கிளிநொச்சி அலுவலகத்தில் இந்த நிகழ்வை நடத்தியுள்ளது.

இதில் முன்னாள் வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கரைச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உறவுகளுக்காக யாழில் அஞ்சலி





முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவு நாள் வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் தமிழர் பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அஞ்சலி செலுத்தியுள்ளது.

குறித்த அஞ்சலி நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 10 நாள்களில் 10 ஆயிரம் கட்டில்கள் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 10 நாள்களுக்குள் 10 ஆயிரம் கட்டில்களை வழங்குவதற்கான ஒரு துரித வேலைத்திட்டம் பல இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கொவிட் நோயாளர்களுக்கான இந்த கட்டில்களை தயாரிப்பதற்கு நாட்டின் பல நிறுவனங்கள் முன் வந்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் தொழில் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த இளம் பெண்களும் இந்த கட்டில்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அந்த வேலைகள் நடைபெறுகின்ற இடத்தைப் பார்வையிட்டார். அம்பாறை மாவட்டத்தில் 4 இடங்களில் கட்டில்கள் தயாரிக்கப்படுவதுடன், கொவிட் நோயாளர்களுக்காக 200 கட்டில்களை தயாரித்து வழங்கவுள்ளனர்.

இதேவேளை, அம்பாறை ஹார்டி உயர்கல்வி நிறுவனத்தில் நடத்தி வரும் கொவிட் 19 மகளிர் விடுதியின் செயல்பாடுகளையும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேற்பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் பிரித்தானிய அரசியல் பிரமுகர்கள்

இலங்கையில் இடம்பெற்ற இறுதி கட்டப் போரின் போது முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று (செவ்வாய்க்கிழமை) அனுஷ்டிக் கப்பட்டது.

இலங்கை அரசுக்கும், விடுதலை புலிகளுக்கும் இடையிலான போர் உக்கிரமடைந்து கொண்டிருந்த இறுதிக்கட்ட போரின்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களை இலங்கை இராணுவம் முற்றுகையிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்த நிலையில் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்றைய நாள் தொடர்பில் பிரித்தானிய அரசியல் பிரமுகர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

# மன்னாரிலும் முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு





முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவு நாள் வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் தமிழர் பகுதிகளிலும் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்திலும் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் காலை 10.15 மணியளவில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் மத தலைவர்கள், மன்னார் நகர முதல்வர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து மாலை அணிவித்து சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து உப்புக்கஞ்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளை விரைவில் மீளத் திறப்பதாயின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

பாடசாலைகளை விரைவில் திறக்க வேண்டுமாயின், பாடசாலைகளினுள் தேவையான சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாடசாலை ஆசிரியர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது, மேல் மாகாணத்திலுள்ள ஆசிரியர்களுக்கு தற்போது கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய மாகாணங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி செலுத்த எதிர்பார்த்துள்ளோம் எனவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# துறைமுக நகர சட்டம் நாட்டுக்குப் பேராபத்து

## எச்சரிக்கின்றார் சஜித்



அரசின் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணையச் சட்டமூலம் மிகப் பெரிய பேரழிவு ஆகும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனியார் ஊடகமொன்றின் அரசியல் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், துறைமுக நகரம் உலகின் புகழ்பெற்ற மையமாக மாற்றப்பட வேண்டும்.

இதற்கிடையில், நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் 'ஸ்மார்ட்' வெளியுறவுக் கொள்கையை இலங்கை கொண்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருள்களுடன் இருவர் மோதரையில் கைது

கொழும்பு, மோதர பகுதியில் போதைப் பொருள்களுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர்களிடம் இருந்து 250 கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஒரு கிலோ கிராம் ஹெஷ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் 95 லட்சம் ரூபா பெறுமதியுடையவை என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மதியம் மோதர பொலிஸார் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஓட்டோ ஒன்றைச் சோதனையிட்ட போது இந்தப் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# அத்தியாவசிய கடைகளைத் தவிர ஏனையவை மட்டக்களப்பில் பூட்டு

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக 5 கிராம சேவகர் பிரிவுகள், நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் முடக்கப்பட்டுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த பகுதிகளில் அத்தியாவசிய வர்த்தக நிலையங்களைத் தவிர ஏனைய அனைத்துக் கடைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் விசேட கூட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கணவதிப்பிள்ளை கருணாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மட்டக்களப்பு – மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலமீன்மடு, நொச்சிமுனை, கல்லடி வேலூர், சின்ன ஊறணி, திருச்செந்தூர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை முடக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பகுதிகளில் அத்தியாவசிய தேவையாகக் கருதப்படும் வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே, கொரோனா வைரஸ் தொற்றை முற்றாக ஒழிப்பதற்கு மாவட்ட மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சிங்கள – பௌத்த அடக்குமுறைக்கெதிராக வீறுகொண்டு ஈழத்தமிழினம் சுதந்திரம் பெறும்!

## முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் திடசங்கற்பம்

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எமது சொந்தங்கள் ஒவ்வொருவரும் எம்மினத்தின் மூச்சாக வாழ்ந்தவர்கள். சிங்கள – பௌத்த அடக்குமுறைக்கெதிராக ஈழத் தமிழினம் என்றோ ஒருநாள் சுதந்திரத்துடன் வாழும் என்ற கனவுடன் மூச்சடங்கிப் போனவர்கள். முள்ளிவாய்க்கால் ஒரு தோல்வியின் புள்ளியல்ல, சிங்கள – பௌத்த அரசு முள்ளிவாய்க்காலை, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஒரு தோல்வியின் முடிவாகவே கட்டமைக்க முயல்கின்றது. முள்ளிவாய்க்கால் சிங்கள – பௌத்த அடக்குமுறைக்கெதிராக தொடர்ந்தும் எழவேண்டிய வரலாற்றுக் கடமையை, பட்டறிவினூடு உணர்த்திய வரலாற்றுத் திருப்புமுனையாகும். என்றோ ஒருநாள் தமிழினம் வீறுகொண்டெழுந்து ஈழத்தமிழினம் சுதந்திரமடையும் என்ற நம்பிக்கை இன்னமும் உள்ளது.

– இவ்வாறு தெரிவித்துள்ளது வடக்கு – கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுகட்டமைப்பு.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள மே – 18 பிரகடனத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தின் முழுமையும் வருமாறு–

முள்ளிவாய்க்கால் எமதினத்தின் இதயம். ஒவ்வோர் ஆண்டும் சிங்கள – பௌத்த அரசு தனது அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து வருவதோடல்லாமல் நினைவேந்தலை நிறுவனமயப்படுத்தவிடக்கூடாது என்பதில் கவனமாய் இருக்கின்றது. அதனால்தான் நினைவுத்திடலை பெயரிட எடுத்த முயற்சிகளைத் தனது இராணுவக் கரம்கொண்டு நசுக்கியிருக்கின்றது. இதனைவிடவும் நாங்கள் இறந்தவர்களை நினைந்து சுடரேற்றும் புனித இடத்தை மாசுபடுத்தி அழித்திருக்கின்றது. இவ்வாறான இராணுவ அடாவடித்தனங்கள் எமதினத்தின் அடக்குமுறைக்கெதிரான விடுதலை வேட்கையை மேலும் உறுதிப்படுத்துமே தவிர நலிவடையச்செய்யப்போவதில்லை.

முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழர்களை ஈழத்தமிழ்த் தன்மையில்' ஒருங்கிணைக்கும் தேசிய விடுதலையின் மையப்புள்ளியாகும். ஈழத்தமிழர்களுக்கென்று நினைவுகூரல் பண்பாட்டுப் பாரம்பரியம் உண்டு. எங்களோடு வாழ்ந்து இறந்து போனவர்களை இன்றும் எம் வீடுகளிலும், பொது பொதுவெளிகளிலும் நினைவுகூருகின்றோம். இறந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு, விளக்கேற்றி அவர்களுடைய சுவாச இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளுகின்றோம். அவர்கள் இறந்த காலத்திற்குரியவர்களாக இல்லாமல் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களாகக் கருதும் நம்பிக்கையில்தான் ஈழத்தமிழர்களது நினைவுகூரல் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய கனவுகள் எப்போதும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கனவுகளைச் சுமந்துதான் அடுத்த தலைமுறை உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எமது சொந்தங்கள் ஒவ்வொருவரும் எம்மினத்தின் மூச்சாக வாழ்ந்தவர்கள். சிங்கள – பௌத்த அடக்குமுறைக்கெதிராக ஈழத் தமிழினம் என்றோ ஒருநாள் சுதந்திரத்துடன் வாழும் என்ற கனவுடன் மூச்சடங்கிப் போனவர்கள். முள்ளிவாய்க்கால் ஒரு தோல்வியின் புள்ளியல்ல, சிங்கள – பௌத்த அரசு முள்ளிவாய்க்காலை, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஒரு தோல்வியின் முடிவாகவே கட்டமைக்க முயல்கின்றது.

அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் தோற்றுப் போனமைக்கான உண்மைகள் உலகில் எங்கும் இல்லை. வரலாற்றுப் பக்கங்களில் விடுதலைப் போராட்ட அணுகுமுறைகள் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றன. விடுதலைப் போராட்டத்தை வெற்றி, தோல்வி என்ற இருமை முறையியலுக்குள் வைத்து ஆராய முற்படுகின்றமை வரலாற்று அபத்தம். அதைத்தான் சிங்கள – பௌத்த அரசு செய்து வருகின்றது.

சிங்கள – பௌத்த அரசு முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை ஒருபோதும் ஏற்று அங்கீகரிக்கப் போவதில்லை. துருக்கிய அரசு ஆர்மேனியப் படுகொலையை 106 ஆண்டுகளாகியும் ஏற்றுக் கொள்ளவில்லை, தொடர்ந்தும் ஆர்மேனியர்களின் இனப்படுகொலைக் கோரிக்கையை மறுத்து, நிராகரித்து வந்துள்ளது. தமிழ் இனப்படுகொலையை மறுத்து, நிராகரித்து வருகின்ற சிங்கள – பௌத்த அரசு வரலாற்றில் ஒருபோதும் நினைவுகூரலுக்கான நினைவுத்திற வெளியை ஈழத்தமிழர்களுக்கு கட்டமைக்கப் போவதில்லை.

பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தை வைத்துக்கொண்டு ஒற்றையாட்சியை மையப்படுத்தி, அதனை வலுப்படுத்தி, தமிழ்த் தேசிய நீக்க அரசியலை சிங்கள – பௌத்த அரசு முன்னெடுத்து வருவதை அனைவரும் அறிவர்.

வடக்கு – கிழக்கில் இராணுவ மயமாக்கலை நீட்சிப்படுத்தி, பயங்கரவாதம் என்ற போர்வையில் வடக்கு – கிழக்கு மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கி, அச்ச மனநிலைக்கூடாக மக்களை ஆள, கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றது. அதையே மக்கள் கிளர்ச்சிக்கு எதிரான உத்தியாகவும், ஆயுதமாகவும் பயன்படுத்துகின்றது. பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றில் இரத்தமற்ற ஆக்கிரமிப்புப் போரை சிங்கள – பௌத்த அரசு வடக்கு – கிழக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அப்போரின் பரிமாணங்கள் நில அபகரிப்பாகவும், சிங்கள – பௌத்த காலணித்துவ மயமாக்கலாகவும், ஈழத்தமிழ் குடிசனப் பரம்பலை மாற்றியமைத்து பிரதிநிதித்துவத்தை சிக்கலுக்குட்படுத்துவதாகவும், சிறிலங்காவின் பெரும்பான்மை ஒற்றைப் பண்பாட்டை அங்கீகரிப்பதாகவும், சிங்கள – பௌத்த ஏகாதிபத்தியத்தை தக்க வைத்துக்கொண்டு மாகவம்சத்தில் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடையும் இலக்கை கொண்டதாகவும் அமைந்திருக்கின்றன.

வடக்கு – கிழக்கில் தமிழர் நிலம் தொடர்ந்தும் சூறையாடப்படுகின்றது. வன திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என சிங்கள – பௌத்த அரச இயந்திரத்தின் பல்வேறு திணைக்களங்கள் நில அபகரிப்புச் செயற்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தமிழர் பூர்விகத்தை நிறுவக்கூடிய மிகத்தொன்மையா ஆதார எச்சங்கள் முதன்மையாக இருந்த போதிலும் அவற்றை இருட்டடிப்புச்செய்து சிங்கள – பௌத்த தொல்லியல் எச்சங்களை மட்டுமே கண்டெடுக்கின்ற தொல்லியல் திணைக்களம் சிறிலங்காவின் வரலாற்றியலை சிங்கள –பௌத்தத்துக்கு மட்டுமானதாக கட்டமைக்க முயலுகின்றது.

கிழக்கில் அபகரிக்கப்படும் தமிழர் நிலங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதில் சிங்கள – பௌத்த அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது. பௌத்த விகாரைகளுக்காக காணிகளை ஒதுக்குவதன் மூலம் சிங்கள பௌத்தத்தை வடக்கு – கிழக்கு எங்கும் அமைத்து வடக்கு – கிழக்கில் தமிழர்களின் பெரும்பான்மை அடையாளங்களைச் சிதைத்து வருகின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மத்திய அரசின் கீழ் காணி நிர்வாகத்தை கொண்டு வருவதுடன் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குகின்றது. ஒட்டு மொத்தத்தில் வடக்கு – கிழக்கில் சிங்கள – பௌத்த அரசு, உளவியல் போரையும், இரத்தமற்ற ஆக்கிரமிப்புப் போரையும் கட்டவிழ்த்து கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை முன்னெடுத்து வருகின்றது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு ஈழத்தமிழர்கள் சர்வதேச விசாரணை மூலமே நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும், பட்டறிவிலும் தொடர்ந்து சர்வதேச விசாரணைக்கான பரிந்துரைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிங்கள – பௌத்த அரசு உள்ளக விசாரணையை மட்டுமே வலியுறுத்தி வந்துள்ளது. ஈழத் தமிழர்களுடைய வரலாற்றுப் பட்டறிவின் அடிப்படையில் உள்ளக விசாரணை ஈழத் தமிழர்களுக்கு ஒருபோதும் நீதியைப் பெற்றுத்தரப் போவதில்லை என்பது திண்ணம்.

சிங்கள – பௌத்த அரசு இனப்படுகொலைக் குற்றவாளிகளை கதாநாயகர்களாக முன்னிறுத்தி தண்டனை விலக்கீட்டு உரிமைக்கூடாக அவர்களைப் பாதுகாத்து வருகின்றது. இனப் படுகொலையாளிகளுக்கு பதவி உயர்வுகளை வழங்கியது மட்டுமல்ல அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழியையும் வழங்கியுள்ளது.

படைக்கட்டுமானத்தை ஒருபோதும் சிங்கள – பௌத்த பேரினவாத குடிமை ஒருபோதும் குற்றவாளிகளாக இனங்காணப்போவதில்லை. இந்நிலையில் சர்வதேச சமூகம் கலப்புப் பொறிமுறையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றமை பாதிக்கப்பட்டவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தை கொடுப்பது மட்டுமல்லாமல் வரலாற்றி லிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளவில்லையோ என எண்ணத் தோன்றுகின்றது.

சர்வதேச சமூகமும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இனப் படுகொலையாளிகளாக தனிநபர்களை அடையாளம்காண முயற்சித்து, அவர்களே பாரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களாக கட்டமைக்க முயற்சிக்கின்றமை சிங்கள – பௌத்த ஒட்டுமொத்த அரசை, அதன் குற்றவாளித் தன்மையிலிருந்து விடுவிப்பதாகும்.

கடந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் ஈழத் தமிழர்களுக்கெதிராகச் செய்யப்பட்ட – செய்யப்படும் இனப்படுகொலை, எதிர்காலத்தில் எந்தச் சிறுபான்மையினத்துக்கும் எதிராகச் செய்யப்படலாம் என்ற அச்சம் எழுவது நியாயமானது. சிறிலங்கா ஒற்றையாட்சி ஜனநாயகத்தன்மையின் உள்ளீடு இனப்படுகொலையை கட்டமைக்கின்றது. சிறிலங்காவின் பல்தேசியத் தன்மை இனங்காணப்பட்டு அங்கீகரிக்கப்படாத வரைக்கும் மேற்கூறப்பட்ட தன்மை மாறப் போவதில்லை.

சிறிலங்காவை ஐ. நா. பொதுப் பேரவைக்கு பாரப்படுத்தி, சர்வதேச குற்றியல் நீதிமன்றின் ஊடாக மட்டும் நீதியைப் பெற முடியும் என்ற ஈழத்தமிழர்களின் கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் மதிப்பளிக்க வேண்டும். சர்வதேச சமூகம் தங்களுடைய புவிசார் அரசியல் நலன்களுக்காக மட்டும் செயற்படுவதைத் தவிர்த்து, அடக்குமுறைக்குட்படும் மக்களின் சார்பாக செயற்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகம் ஆர்மேனியப் படுகொலையை, இனப்படுகொலையாக இனங்கண்டு அங்கீகரிப்பது நம்பிக்கையைத் தருகின்ற போதிலும் 106 வருடங்கள் என்பது மிக நீண்ட காலம் என்பது மட்டுமல்ல பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய வாழ்நாளில் நீதியைப் பெற்றுக் கொள்ளாதுபோகின்றமை மிகுந்த வேதனையையும் ஏமாற்றத்தையும் அளிக்கின்றது.

நினைவுகூரல் என்பது அடிப்படை மனித உரிமை. அடிப்படை மனித உரிமைச் சாசனத்தின் வரலாற்றுப் பின்புலம். இனப்படுகொலைகளின், பாரிய மனித உரிமை மீறல்களின் அடிப்படையைக் கொண்டிருக்கின்றது. மனித உரிமைச் சாசனத்தில் நினைவுகூரலை, ஓர் உரிமையென வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அந்த உரிமை எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றது. இந்த நினைவுதினம் ஈழத்தமிழர்களை பின் முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுத் தளத்தில் வெறும் அடக்குமுறைக்குட்படுவோராக மட்டும் கட்டமைக்காமல், சிறிலங்கா அரசின் இனப்படுகொலை உள்நோக்கத்தை வெளிப்படுத்தி, கூட்டாக நீதிவேண்டிய அணிதிரட்டலுக்கு வினைத்திறனோடு அழைப்பு விடுக்கின்றது.

முள்ளிவாய்க்கால் சிறிலங்காவின் இனப்படுகொலைக்கெதிரான சொல்லாடலை கேள்விக்குட்படுத்தி சிக்கலுக்குட்படுத்துகின்றது. நினைவுத்திறம் பலம் வாய்ந்தது. இதுவும் நீதி வேண்டிய பயணமுமே பின் முள்ளிவாய்க்கால் தளத்தில் தமிழர்கள் கையிலெடுக்கப் போகும் ஆயுதங்கள்.

சிங்கள – பௌத்த அரசின் இனப்படுகொலையின் அதியுச்சமாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை விளங்குகின்றது. எமது சொந்தங்களையும் அவர்களது கனவுகளையும் நினைவுகூராவிடில் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது. இனப்படுகொலைக்கான நீதி வேண்டிய பேரணியில் பிளவுகளைக் கடந்து ஒன்றித்து பயணிக்க அழைப்புவிடுக்கின்றது.

ஈழத்தமிழர் விடுதலை, தமிழினத்தின் சமபலக் கட்டமைப்பில்தான் தங்கியுள்ளது. சமபலக் கட்டமைப்பு, சமூக கட்டமைப்புக்களைப் பலப்படுத்தி தன்னிறைவை நோக்கிய நகர்வில், உள்ளக முரண்பாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு மக்கள் சக்தியை பேரியக்கமாகக் கட்டியெழுப்புவதில்தான் ஈழத்தமிழர்களின் அடுத்தகட்ட நகர்வு தங்கியுள்ளது. சர்வதேச சமூகம் ஈழத்தமிழர்களின் நலன்கருதி மட்டும் செயற்படுமா என்பது சந்தேகத்திற்குரியது. ஆனால் உலக, பிராந்திய ஒழுங்குகளைக் கருத்தில் கொண்டு, புவிசார் அரசியல் சாணக்கிய உத்திகளை ஈழத்தமிழர் பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதை மறுக்க முடியாது.

ஏகாதிபத்திய போட்டி, அரசியல் புதிய ஒழுங்காக அமைகின்றபோது, வடக்கு – கிழக்கின் பிராந்திய அமைவிடம் முக்கியத்துவம் பெறுகின்றது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, ஈழத்தமிழ்த்தன்மையில் ஒன்றுபட்டு பயணிப்பது வரலாற்றுக் கட்டாயமாகும்.

பின்வரும் கோரிக்கைகளை முள்ளிவாய்க்கால் பிரகடனம் முன்வைக்கின்றது. நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும்கூட. ஆகவே சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒருபோதும் தடுக்க முடியாது. தமிழ் இனப்படுகொலைக்கு நீதிவேண்டி, இனப்படுகொலைக் குற்றவாளிகளை மட்டுமல்ல சிங்கள – பௌத்த அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக பாரப்படுத்த வேண்டும். ஐ.நா. மனித உரிமைப் பேரவையிலிருந்து, சிறிலங்காவை ஐ. நா. பொதுச் சபைக்குப் பாரப்படுத்தி தமிழ் இனப்படுகொலையை விசாரிக்க சர்வதேச பொறிமுறை ஒன்றை அமைக்கும்படி கோருகின்றோம்.

தமிழ் இனப்படுகொலையை அங்கீகரித்து, அதன் மீள் நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும். வடக்கு – கிழக்கில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

சிறிலங்காவின் பல்தேசியத்தன்மையை உறுதிப்படுத்தி தமிழர்கள், தேசத்துக்கு உரித்துடையவர்கள் என்பதோடு தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்கள் சுயாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதைத் தெரிவிக்கின்றோம். ஈழத்தமிழர்கள் அனைவரும், ஈழத்தமிழ்த் தன்மையில்' ஒன்றுபட்டு தமிழின விடுதலைக்காக உழைக்க முன்வருவோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நீதி கிடைக்கும் வரை ஓயாது போராடுவோம்

## நினைவேந்தல் நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்மாநகரசபையிலும்முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு, யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் பிரதி முதல்வர் து.ஈசன் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு, இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தினர்.

அதனைத்தொடர்ந்து உரை நிகழ்த்திய முதல்வர், 'உயிரிழந்த எமது உறவுகளுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி, அவர்களது இழப்புக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதாகும். ஆகவே, நீதி கிடைக்கும் வரை ஓயாது போராட நாம் உறுதி பூணுவோம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வைகாசி மாதத்தில் இதுவரை 37 ஆயிரத்து 56 நோயாளிகள்

இலங்கையில் இந்த வைகாசி மாதத்தில் இதுவரை 37 ஆயிரத்து 56 நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என கொரோனா தொற்றைதடுக்கும்தேசிய செயற்பாட்டுநிலையம்தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 2021 மே முதலாம் திகதி முதல் 2021 மே 18 ஆம் திகதி காலை 06 மணி வரை 7ஆயிரத்து 819 கொரோனாத் தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் இதே காலகட்டத்தில் 6 ஆயிரத்து 230 கொரோனாத் தொற்று நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

களுத்துறையில் 4 ஆயிரத்து 872 பேரும் காலியில் 2 ஆயிரத்து 585 பேரும் குருநாகல் மாவட்டத்தில் 1,821 பேரும் கண்டியில் 1,671 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## கொடிகாமம் வடக்கு மற்றும் மத்தி கிராம சேவகர் பிரிவுகள் விடுவிப்பு

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொடிகாமம் வடக்கு, மத்திய கிராம சேவையாளர் பிரிவுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை விடுவிக்கப்பட்டன.

அண்மையில் கொடிகாமம் சந்தை உள்ளிட்ட வர்த்தக தொகுதியில் பலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொடிகாமம் வடக்கு மற்றும் கொடிகாமம் மத்தி ஆகிய இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகள் கடந்த மே 4 ஆம் திகதி, இரவு முதல் தனிமைப்படுத்தப்பட்டன.

இந்த நிலையிலேயே குறித்த கிராம சேவையாளர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றுள்ளது. இதன்போது பொதுச்சுடர், நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், உப தவிசாளர் சின்னையா தவபாலன், ஏனைய உறுப்பினர்களான தாமோதரம்பிள்ளை ரஜனிகாந்த், லலிதகுமாரி சத்தியமூர்த்தி, ஆறுமுகம் சிவநேசன், அருணாசலம் சத்தியானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு நினைவுரை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனை நினைவு கூர்ந்தமைக்காக மட்டக்களப்பில் ஒருவர் கைதாகினார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நினைவு கூர்ந்தமைக்காக மட்டக்களப்பு கல்குடா பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறுதி போரின்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் தமிழர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், விடுதலைப் புலிகள் அமைப்பின் எந்த உறுப்பினர்களையும் நினைவுகூருவதற்கு மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அந்தவகையில் பிரபாகரனின் மரணத்தை நினைவுகூரும் நிகழ்வை ஏற்பாடு செய்ததற்காக 38 வயது ஒருவரை கல்குடா பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வலி. கிழக்கு பிரதேச சபையிலும் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வு

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை ஈகைச் சுடரேற்றப்பட்டு உணர்வு பூர்வமாக இடம்பெற்றன.

சுகாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அச் சமயத்தில் பிரசன்னமாகியிருந்த பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகஅனுஷ்டிக்கப்பட்டது.

தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில், போர் முடிவுறுத்தப்பட்டு 12 ஆண்டுகள் முடிவடைகின்ற போதும் தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டதற்கு நீதி கிட்டவில்லை என்பதை நினைவு கூர்ந்து 12 நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அகவணக்கத்தைத் தொடர்ந்து பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பொது ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார்.

பிரதேச சபை வளாகத்தில் உள்ள நினைவேந்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் சிவப்பு, மஞ்சல் கொடிகள் பறக்கவிடப் பட்டு இன ஒடுக்குமுறைக்கு எதிரானஉணர்வுகள்வெளிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டனர் ரயில்வே திணைக்கள ஊழியர்கள்

ரயில் ஓட்டுநர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று தொழிற் சங்கங்களுக்கு உறுதியளிக்கப்பட்டதை அடுத்து ரயில் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

இதனையடுத்து, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மதியம் 1.30 மணி முதல் ரயில்கள் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன என ரயில்வே என்ஜின் ஓட்டுநர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டு சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தடுப்பூசி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதையடுத்து, எந்தவித இடையூறும் இல்லாமல் தங்கள் சேவையை மீண்டும் தொடங்க அவர்கள் ஒப்புதல் தெரிவித்தனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### தாவர வைத்தியர்கள்

மனிதர்களுக்கான வைத்தியர்கள், விலங்குகளுக்கான வைத்தியர்கள் போன்று தாவரங்களுக்கு ஏற்படும் நோய் பூச்சி தாக்கங்கள் பிற காரணிகள் போன்றவற்றிற்கு யார் வைத்தியம் செய்வார்கள்.

விவசாயத் திணைக்களத்தின் பயிர்ப் பாதுகாப்புச் சேவையும் சர்வதேச CABI நிறுவனமும் இணைந்து விவசாயப் போதனாசிரியர்களை தாவர வைத்தியர்களாக பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் வருடாவருடம் மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் நடைபெறுகிறது. இதன் மூலம் விவசாயத்துறையை பாதிக்கும் காரணிகளை தவிர்க்க மற்றும் இல்லாது செய்ய முயற்சிகள் விவசாயப் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

## முள்ளிவாய்க்கால் நிகழ்வு அனுஷ்டிப்பு; வாழைச்சேனையில் மூன்று பேர் கைது

மட்டக்களப்பு - வாழைச்சேனை பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்று வந்த யுத்தம் நிறைவடைந்து நேற்றுடன் 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இந்த நிலையில், கடும் எதிர்ப்புக்கு மத்தியில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நேற்று (செவ்வாய்க்கிழமை) வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் நினைவுகூரப்பட்டது.

அதற்கமைய மட்டக்களப்பு - வாழைச்சேனை பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை சிலர் அனுஷ்டித்தனர்.

இந்த நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நினைவு கூரலில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர்.

அதற்கமைய 3 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், ஏனையவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனக் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





08 அங்கம்

செல்லத்துரை ரவீந்திரன்

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**இனப்படுகொலை என்பதை நியாயப்படுத்துவதை தமிழர்களிடையே இருக்கும் ஒற்றுமையீனம் பாதிக்குமா அல்லது பாவிக்கப்படுமா?**

நிச்சயமாக இரண்டும் நடக்கும். அதில் சந்தேகமேயில்லை. எமது விடிவுக்கான எல்லா முயற்சிகளையும் அந்த ஒற்றுமையீனமே பாதித்தது. விடுதலைப் போராட்டங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியனகூட இதனால் நீர்த்துப் போயின.

சரித்திரங்களிலிருந்து பாடங்கள் கற்றுக் கொள்ளாத எவரும் மீட்சி பெறப்போவதில்லை தமிழர்களுக்கு, தங்களிடையே உள்ள ஒற்றுமையீனம் தங்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பது தெரியாததல்ல. அதனை அவர்கள் புரிந்து கொள்ளாதவர்களல்லர். ஆனாலும் அதைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதிலேயே முனைப்பாயிருக்கிறார்கள்.

தமிழர்களில் சில பகுதியினர் (அரசியல் கட்சிகள் கூட) தாம் தமிழரின் பிரதிநிதிகள் என்ற வகையில் தங்களது சமர்ப்பணங்களே ஐ.நாவில் பெறப்படுகிறது, பார்க்கப்படுகிறது என்று நினைக்கிறார்கள். உண்மை நிலை அதுவல்ல. ஸ்ரீலங்காவிலுள்ள உலக நாடுகளின் தூதுவர்கள் அனுப்பும் அறிக்கைகள், அரச சார்பற்ற, கட்சி சார்பற்ற நிறுவனங்களின் ஆராய்வுகளும் பரிந்துரைகளும், புலம்பெயர்ந்து வாழும் மக்களின் மகஜர்கள் என பல ஆயிரக்கணக்கில் ஆராயப்படும். அரிசியில் கல் பொறுக்கும் போது பெருமளவில் கல் இருந்தால் அது பொறுமையை சோதிப்பது போல, தேவைக்கு அதிகமாக போட்டால் – போட்டியில் ஆயிரக்கணக்கில் தமிழர்களே முன்னுக்குப் பின் முரணானவற்றைச் சமர்ப்பித்தால், ஐ.நா. அதிகாரிகளுக்கு கூட அவற்றை படிப்பதில், ஆராய்வதில் பொறுமை குன்றிவிடும். ஒரு பொது நிலைப்பாட்டில், தமிழருக்காக என்று அணுகாது கட்சிப் பிரதிபலிப்புக்காக வித்தகங்கள் செய்கிறோம். அதனால் காரியங்களையே கெடுக்கிறோம்.

இவற்றிடையே, ஏறும் படிகளாக இல்லாமல், இறங்கும் அல்லது சறுக்கும் படிகளாக ஸ்ரீலங்கா அரசுக்கு மிண்டு கொடுத்த, கொடுக்கும் தமிழ் கட்சிகள் குழுக்களின் பரிந்துரைகளும் அடங்கும். இவை தேசியக் கட்சிகள் கொடுக்கும் சாட்சியங்கள், வாதங்களுக்கு எதிராக அரசின் உந்துதலினால் எழுதப்பட்டவை. அவை மறுதலிப்பாக இருக்கும். அவற்றை ஐ.நா. ஒரு தலைப்பட்சமாக ஓரம் தள்ள முடியாது. அந்தக் கட்சிகள், குழுமங்களின் கூற்றுக்கள் அபத்தமானவை, அர்த்தமற்றவை என்று நிறுவும் கடமை இனப்படுகொலை என கோருவோருக்கு உண்டு.

இவை இந்த கட்சிகளாலும் குழுக்களாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான வன்மத்திலும், தங்கள் பாதுகாப்பதாக அவர் செய்தால், அதனால் தமிழர்கள் என்ன கேட்கிறார்கள், என்ன அபிலாஷைப்படுகிறார்கள் என்பதையே சர்வதேசம் மட்டுமல்ல ஐ.நா. கூட புரிந்து கொள்ள முடியாது. நாங்கள் ஒரு கரியத்தை எப்படி அணுகுகிறோம் என் பது முக்கியம்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் இனப் படுகொலையை ஐ.நா. பாதுகாப்புக்கு சபைக்கு எடுத்துச் சென்று நிரூபித்து அதன் வழியாகவே இனப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று ஒற்றைக்காலில் நிற்கிறாரே?**

அவர் சிந்திக்கும் வழியில் அவரது பார்வையில் உறுதியாக நிற்கிறார். திடசங்கற்பமும் கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளிடம் அவர் கோலோச்சிய காலங்களில் தமிழ் ஈழத்துக்கு மாற்றுத் தீர்வு என்ன என்று கேட்டால் மாற்றுத் தீர்வு தமிழ் ஈழமே என்று சொல்லுவார்கள். ஆயினும் 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்பது அவர்களின் இலச்சினைகள், பரப்புரைகள் எல்லாவற்றிலும் இருக்கும். தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமல்ல. எல்லா விடுதலை இயக்கங்களும், விடுதலைப் புலிகள் கூட, இறைமையுள்ள, சுதந்திர தமிழ் ஈழத்தை நிறுவுவதே அவர்களது கோட்பாடு என்று புறப்பட்டவர்கள்தான். திம்பு மாநாட்டின் பின்தான் தமிழரின் தாகம் தமிழ்த் தாயகம் என்ற அரசியல் நிலைப்பாடு உருவம் பெற்றது. உன்னிப்பாகப் பார்த்தால், அது இறைமையுள்ள, சுதந்திர தமிழ் ஈழமல்ல. நான் சில சமயங்களில் அதனை அவர்களிடம் நோண்டும் போது, முதல் தாயகத்தை பெற்றுக் கொள்ள வேண்டும், அதன் பின்தான் அதனை இறைமையுள்ள சுதந்திர நாடாக்க வேண்டும் என்பார்கள்.

ஆனால் இந்தத் தீர்க்க தரிசனத்தை நோர்வேயுடன் சேர்ந்து ஈடுபட்ட பேச்சுவார்த்தைகளில் சாதகமாக்கிக்கொள்ள முனைப்புக் காட்டவில்லை.

அதைத் தொடர்ந்து ராஜபக்ஷவினால் போர் நிறுத்த ஒப்பந்தம் முறிக்கப்பட்டது. அவர்கள் ஏற்படுத்திய தாயகமும் போனது.

அதே தாயகம் என்ற கோட்பாட்டில்தான் மற்றைய விடுதலைப் போராட்டக் குழுக்களும் திம்பு பேச்சுவார்த்தைக்கு பின் இருந்தாலும் அவர்களுடனும் சேர்ந்து தாயகம் என்ற கோட்பாட்டில் இணைந்திருந்தால் தமிழர்களது நிலை வேறு விதமாக இருந்திருக்கும்.

அதுபோல கஜேந்திரகுமார் இனப்படுகொலை என நிறுவப்படுவதே தமிழ் மக்களுக்குத் தீர்வு என்ற பிடிவாத நிலையில் இருந்து இறங்குவது இல்லை. அது தன்னை மற்றைய கட்சிகளில் இருந்து வித்தியாசப்படுத்துகிறது என்கிறார். அதனை அடையக்கூடிய வழிமுறையிலுள்ள கஷ்டங்களையும் யதார்த்தங்களையும் சுட்டிக் காட்டினேன். அப்படியான கஷ்டங்கள் இருந்தாலும் அவற்றைச் சமாளித்துச் செல்ல ஒரு வழி, தன்வழி, தனிவழி, தனது பொறிமுறை உண்டு என்ற நம்பிக்கையில் பயணிக்கிறார். ஆனால் நிழல்கள் நிஜமாவதில்லை என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. எந்த உயரத்தில் பறந்தாலும் பருந்தானாலும் கழுகானாலும் உணவிற்கு நிலத்துக்கு வந்தேயாக வேண்டும். அந்தச் சூழலில்தான் உணவைத் தேடலாம். அதை அவர் புரிந்து கொண்டால் சரி.

களை இல்லாதொழிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் , அது நடந்தால் அதிகார வர்க்கத்திடமிருந்து சலுகைகள், நன்மை கிடைக்கும், அதில் தமிழர்களுக்கு மீட்சியும் வரும் என்ற நம்பிக்கையிலும் செய்யப்பட்டவை. ஆனால் தொடர்ந்தும் எந்த விடிவுமே இல்லை என்று தெரிந்தும் செய்யப்படுகின்றது.

இவை ஒட்டு மொத்தமாக எவ்வளவு தூரம் தமிழரது அபிலாஷைகளைப் பாதிக்கின்றன என்பதை அவர்கள் உணர்வதில்லை. ஆயினும் அவர்களுக்கு ஏதாவது வழியில் ஒரு வாக்கு வங்கி உண்டு.



**படித்த,ஆளுமையுள்ள தேசிய கட்சித் தலைவர்கள் கூட இனப்படுகெலை பற்றி விதம்விதமாக பேசுவது பாதிப்பை தரும் என்பது அவர்கள் அறியாததா?**

அவர்கள் அதை உணராமலிருக்க முடியாது. ஆனால் உணர்ந்தும் அப்படி செய்கிறார்கள் என்று நான் அபிப்பிராயம் சொல்ல முடியாது. இனப்படுகொலை என்பது ஒரு பரந்த விரிப்பு. அதில், பல பார்வைகள் இருக்கலாம், அதனால் சில வியாக்கியானங்களில், அதன் அணுகு முறையில் (strategy) கருத்து வேற்றுமைகள் உருவாகலாம். அதைப் பிரதிபலிக்கலாம். ஆனாலும் அவற்றில் எது தமிழ் மக்களுக்கு நல்லது என்ற பொது நிலைப்பாட்டை பேண வேண்டும். அப்படியில்லாமல், அதில் அரசியல்

வளரும்...

காலைக்கதிர் Kalaikkathir

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: நாடாளுமன்றத்தில் நேற்று அஞ்சலி

## கறுப்பு உடையில் கூட்டமைப்பு எம்.பிக்கள்



(ந.லோகதயாளன்)

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று அஞ்சலி செலுத்தினர்.

கறுப்பு உடைகளை அணிந்து அவர்கள் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இவர்கள் சபை நடவடிக்கைகளிலும் கறுப்பு உடையிலேயே கலந்துகொண்டனர்.

எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இரா.சாணக்கியன், தவராசா கலையரசன் மற்றும் கோவிந்தம் கருணாகரன் ஆகியோர் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நினைவேந்தலுக்கு அனுமதித்தமை தொடர்பில் பல்கலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைது

## கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை மாணவர்கள் நடத்த அனுமதித்தமை தொடர்பில் பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாணவர்களை அனுமதித்தமை தொடர்பிலும் அங்கு நடைபெற்ற நிகழ்வு பற்றியும் வாக்குமூலம் பெறுவதற்காக அந்தக் குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை யாழ்.பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் ஏற்பாடு செய்வார்கள் எனப்பல்கலைக் கழகத்தைச் சுற்றி இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு மக்களின்

# அகதி வாழ்க்கை யுகத்தை நாம் முடித்து வைத்தோம்!

## சபையில் மஹிந்த பிதற்றல்



வடக்கு, கிழக்கு மக்களின் அகதி வாழ்க்கை யுகத்தைத் தாம் முடிவுக்குக் கொண்டுவந்ததாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

போர் நிறைவின் நினைவு தினத்தை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் 20 ஆண்டுகளாக எத்தருணத்திலேனும் கொல்லப்படலாம் என அச்சத்தில் வாழ்ந்த வடக்கு, கிழக்கு மக்கள் தமது வீடுகளுக்குச் சென்று கௌரவமாக வாழ்வதற்கு நாம் வழியமைத்தோம்.

போர் வெற்றி என்பது நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் கிடைத்த வெற்றி அல்ல. இந்த வெற்றியின் மூலம் பயங்கரவாதிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திய நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வெற்றி வடக்கு, மற்றும் கிழக்கு மக்களுக்கும் சொந்தமானது.

மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றம் வந்த மக்கள் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் ஆரம்பமாக இலக்கு வைத்தனர்.

போர் வெற்றியின் காரணமாக இன்று வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றை சுதந்திரமாக நடத்த முடியுமாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் வர வாய்ப்பு ஏற்பட் டுள்ளது.

அன்று போருக்குச் சென்ற எவரும் இனப்படுகொலை நிகழ்த்துவதற்காக அங்கு செல்லவில்லை. அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக ஆகியோர் இனப்படுகொலை நிகழ்த்துவதற்காகத் தங்களது படைகளை வழிநடத்தியவர்கள் அல்லர்.

வடக்கின் அப்பாவி பிள்ளைகள், தாய், தந்தையர், அச்சமடைந்த மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி போராடிய காட்டுமிராண்டித்தனமான குழுவுக்கு எதிராகவே அவர்கள் போராடினார்கள்.

அம்மக்களைக் காப்பாற்றி பயங்கர வாதிகளுக்கு எதிராக போராடுவதே எங்கள் நோக்கமாக இருந்தது.

அது இராணுவத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு கடினமான சவாலாகும். அவர்கள் அதைச் செய்தார்கள் - என்றார்.

# முன்னாள் எம்.பி. துரைரெட்ணசிங்கம் கொரோனாத் தொற்றால் காலமானார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமத்தம்பி துரைரெட்ணசிங்கம் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த அவர், கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் திங்கள்இரவு காலமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர், இறக்கும் போது வயது 80.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு - சேனையூரில் 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்த அவர், பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றினார். பின்னர், திருகோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், அதனைத் தொடர்ந்து தம்பலகாமம் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பணி யாற்றினார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார். அதில் அவர் வெற்றிபெறாத போதும், தேசியப் பட்டியல் உறுப்பினர் மு.சிவசிதம்பரம் உயிரிழந்தமையைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட துரைரெட்ணசிங்கம், அதில் வெற்றியடைந்து மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

அதன்பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் அவர் மீண்டும் போட்டியிட்டு அதில் தோல்வியடைந்தபோதும், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பவற்றின் அரசியல் உயர்பீட உறுப்பினரான அவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் மூவின சமூகத்துக்கும் சேவை செய்த சிறந்த அரசியல்வாதியாவார்.

# அரச இணையதளங்கள் மீது சைபர் தாக்குதல்கள்

இலங்கையின் அரச இணையதளங்கள் மீது நேற்று அதிகாலை சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சு, ரஜரட்ட பல்கலைக் கழகம் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதரகம் ஆகியவற்றின் உத்தியோகப்பூர்வ இணையதளங்கள் மீதே சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாக்குதல்களுக்கு உட்பட்ட இணைய தளங்கள் சீர்செய்யப்பட்டன என்று இலங்கை விமானப்படையின் பேச்சாளர் துஷான் விஜே திலக தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப்படையின் இணைய பாதுகாப்புப் பிரிவு, இந்த சைபர் தாக்குதல் தொடர்பாக ஸ்ரீலங்கா கணினி அவசர தயார்நிலை அணிக்கு அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இலங்கையில் இறுதிப் போர் முடிவுக்கு வந்த தினமான மே 18 இல் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# துரைரட்ணசிங்கத்திற்கு நேற்று யாழில் அஞ்சலி



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,மே 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமத்தம்பி துரைரட்ணசிங்கத்தின் அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, சீ.வி.கே.சிவஞானம், ஈ. சரவணபவன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அமரர் துரைரெட்ணசிங்கத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# ஈழத்தமிழினம் தனது இலக்கினை அடையும் வரை வரலாறை இளம் தலைமுறைக்குக் கடத்துவோம்!

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் சபதம்

தமிழினம் தனது இலக்கை அடையும் வரை எமது வரலாற்றைத் தொடர்ச்சியாக இளம் தலைமுறையினருக்கு கடத்துவோம் என முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

மே – 18 முள்ளிவாய்க்கால் நினைவுநாளான நேற்று (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், 'தமிழர் தேசம் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ச்சியாக சிங்கள தேசத்தின் இனவழிப்பிற்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகிக்கொண்டே வருகின்றது.

இதன் உச்சக்கட்டமாக 2006ஆம் ஆண்டு ஆரம்பித்த ஆக்கிரமிப்பு 2009ஆம் ஆண்டு அதியுச்சம் பெற்றது. இந்த இறுதி யுத்தத்தின்போது ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 679 பொது மக்கள் கொல்லப்பட்டு அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை மறைந்த ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை புள்ளிவிவரங்கள் மூலம் ஆதாரபூர்வமாக நிறுவினார்.

இறுதி ஆறு மாதங்களில் மட்டும் எழுபதாயிரத்துக்கும் (70,000) மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டமையை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். மனிதகுல மாண்புகளின்றி குழந்தைகளைக்கூட பிடித்து சுட்டுக் கொன்றும், பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்டனர்.

2017ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது , தமிழ் பெண்கள் 'பாலியல் அடிமைகளாக' கையாளப்பட்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட 'பாலியல் வன்முறை முகாம்கள்' பற்றிய விவரங்களை ஐ.நாவிடம் கையளித்தது.

ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர்.

மிகப்பெரும் மனித பேரவலத்துடனும் மனித உயிரிழப்புகளுடனும் யுத்தம் மௌனிக்கப்பட்டாலும் தமிழினத்தின் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இவ்வாறு, நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக்கொண்டிருக்கும் எமது இனத்துக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

சிறுவர்கள், பெண்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களைக்கொன்று குவித்து எமது தேசத்தை ஆக்கிரமித்தது மட்டுமல்லாது தொடர்ந்தும் எமது மக்களை அடிமைகளாக ஒடுக்குவதிலேயே சிங்கள அரசு குறியாக உள்ளது.

உரிமை கேட்டு போராடிய எமது இனம் இன்று கொல்லப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும் நினைவேந்துவதற்கும் போராடவேண்டி உள்ளது.

தொடர்ச்சியாக எமது நிலங்களை தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் சிங்கள அரசானது, தமிழர் தேசத்தினை சிங்கள மயப்படுத்துவதிலேயே முனைப்புடன் செயற்படுகின்றது.

தமிழ் இனத்தின் இருப்பை இத்தீவிலே கேள்விக்குறியாக்கிக்கொண்டிருக்கும் சிங்கள அரசு, மறுபுறத்தே திட்டமிட்ட முறையில் தமிழினம் தமது அரசியல் அபிலாஷைகள், அரசியல் தீர்வு நோக்கிச் சிந்திக்காத வண்ணம் தமிழர் தேசம் எங்கும் பிரச்சினைகளையும் கவனச் சிதறல்களையும் உருவாக்கிக்கொண்டே உள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய மனிதப் பேரவலம், தமிழினத்தின் மீதான இனவழிப்பின் ஆரம்பமோ, முடிவுவோ அல்ல. நீண்ட தொடரான இனவழிப்பின் ஓர் அங்கமே. இத்தொடரான இனவழிப்பிலிருந்து எமது இனத்தைப் பாதுகாக்க சர்வதேச நீதிப் பொறிமுறையின் மூலம் நீதி வழங்கப்படுவதுடன், மீள நிகழாது இருப்பதை உறுதிசெய்ய சர்வதேசத்தால் நடத்திக் கண்காணிக்கப்படும் வடக்கு கிழக்கு தழுவிய சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும்.

இதற்கான ஆரம்ப புள்ளியாகவே தமிழ் மக்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தித் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

தமிழினத்தின் விடுதலைக்கான திறவுகோல் முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்தே மீண்டெழும் எனும் பொதுத் தளத்தில் ஒன்றிணைத்து பயணிக்க தமிழினம் இந்நாளில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழினத்தின் மீதான இனவழிப்பை நினைவேந்தும் இந்நாளில், அநியாயமாகக் கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணக்கங்களைச் செலுத்துகின்றோம்.

கொல்லப்பட்ட உறவுகளை நினைவேந்தும் விதமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் பொதுக் கட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் காலை 10.30 இற்கு இடம்பெறுகின்றன. இதில் கொவிட் – 19 விதிமுறைகளைப் பின்பற்றி கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டது.

வரலாறே எமது வழிகாட்டியாக உள்ளதால் எமது இனத்தின் வரலாற்றை இளைய சந்ததிக்குக் கடத்துவதை இனத்துக்குரிய கடமையாக நாம் ஒவ்வொருவரும் தவறாது நிறைவேற்றுவோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மேலும் அறுவருக்கு வவுனியாவில் தொற்று

வவுனியாவில் மேலும் 6 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில கடந்த திங்கட்கிழமை இரவு வெளியாகின.

அதில், வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், காக்கையன்குளம் பகுதியில் ஒருவருக்கும், சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் ஒருவருக்கும், நித்தியநகர் பகுதியில் ஒருவருக்கும், செட்டிகுளம் பகுதியில் இருவருக்கும் என மேலும் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், வவுனியாவில் உள்ள அரச வங்கி ஒன்றின் பிராந்திய முகாமையாளருக்கும் பருத்தித் துறையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

# ஆத்மசாந்தி பிரார்த்தனை நிகழ்வுகள் வவுனியாவில்



வவுனியாவில் முள்ளிவாய்க்காலில் மரணித்த மக்களின் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெற்றது.

வவுனியா, குட்செட் கருமாரி அம்மன் தேவஸ்தானத்தில் ஆலய பிரதம குரு பிரபாகரக்குருக்கள் தலைமையில் விசேட ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றன.

தமிழ்விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு மற்றும் கருமாரி அம்மன் கோவில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்தப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த வழிபாடுகளில் சமூக ஆர்வலர்கள், உறவுகளை இழந்தவர்கள் கலந்து கொண்டு தீபம் ஏற்றி ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தித்தனர்.

இதேவேளை, பூஜை நிகழ்வுகள் இடம்பெற்ற போது ஆலயத்தின் வளாகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பூஜை நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தவர்களின் அடையாள அட்டையை பரிசோதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

# பருத்தித்துறை மீன்சந்தை மறு அறிவித்தல் வரை பூட்டு

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக பருத்தித்துறை மீன் சந்தை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

குறித்த மீன் சந்தையிலுள்ள வியாபாரிகள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த தகவலுக்கமைய பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் மீன் சந்தை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் நாட்டில் அதிகரித்துள்ளமையால் சந்தைகளுக்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாருக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படும்

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய மகப்பேற்று வைத்தியர்கள் ஆய்வகத்தின் செயலாளர் விசேட வைத்தியர் சாமிந்த மாதொட இதனைத் தெரிவித்தார்.

தடுப்பூசிகள் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கும் குழுவின் கூட்டத்தில் மகப்பேற்று வைத்தியர்களால் கர்ப்பிணிப் பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் தடுப்பூசி வழங்குவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கு அந்த குழு அனுமதி வழங்கியதுடன், இதற்கான திட்டம் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் இம்மாதம் 21 ஆம் திகதி வழங்க முடிவு

அரச உத்தியோகத்தர்களுக்கான இம்மாத சம்பளத்தை உரிய தினத்துக்கு முன்னதாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் கொரோனா பரவல் நிலைமையால் விதிக்கப்படும் பயணக்கட்டுப்பாடு மற்றும் ஏப்ரல் மாதத்துக்கான சம்பளம் சிங்கள – தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக வழங்கப்பட்டமை ஆகிய காரணங்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

# முட்டிக்குள் முப்பது கைக்குண்டுகள் வவுனியா பூவரசங்குள பகுதியில் மீட்பு

வவுனியா – பூவரசங்குளம் பகுதியிலுள்ள தோட்ட காணியில், 30 கைக்குண்டுகள் அடங்கிய முட்டியொன்றை பூவரசங்குளம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

'பூவரசங்குளம் செங்கல்படை பகுதியிலுள்ள தனியார் தோட்ட காணியை, அதன் உரிமையாளர் உழவு இயந்திரம் ஊடாக பண்படுத்தியுள்ளார்.


இதன்போது முட்டி ஒன்றினுள் கைக்குண்டுகள் இருக்கின்றமையை அவர் அவதானித்துள்ளார். அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், முட்டி ஒன்றிற்குள் இருந்த 30 கைக்குண்டுகளை மீட்டுள்ளனர்.

மேலும் குறித்த பகுதியில், வெடிபொருளகள் மண்ணிலும் புதையுண்டு இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த பகுதியை, சோதனை செய்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பகுதியில், விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாம் இருந்ததாகவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# தனித் தமிழ் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் திட்டம் சாத்தியமற்றது

## ஒப்புக்கொள்கின்றார் மனோ கணேசன்



தேர்தல் முறைமை மாற்றத்தின் விளைவாக தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் முன்மொழியப்படுகின்ற தனித் தமிழ் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் திட்டம் சாத்தியமற்றது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

புதிய தேர்தல் சீர்திருத்தம் மூலம், வடக்கு, கிழக்கு வெளியே வாழும் சிறுபான்மை மக்களுக்கே அதிக ஆபத்து காத்திருக்கிறது.

எனவே, தற்போதுள்ள விகிதாசார முறைமையே சிறப்பானது என்றும், அது மாற்றப்படக்கூடாது என்றும் தாங்கள் எடுத்துரைக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும், மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் விரும்புமாயின், வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள,தற்போதைய பிரதிநிதித்துவங்களை குறைத்துவிடாமல் வைத்துக்கொள்ள உத்தரவாதம் தரப்பட வேண்டும் என்றும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

# 8 மாவட்டங்களில் 'கொரோனா' மேலும் பரவக்கூடிய பேராபத்து!

இலங்கையில் தற்போதைய நிலையில் எட்டு மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்று பரவக்கூடிய பேராபத்து காணப்படுகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாளாந்தம் 100 இற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், காலி, நுவரெலியா, கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அடையாளம் காணப்படுகின்றனர்.

எனவே, இந்த மாவட்டங்களில் கொரோனாத் தொற்று மேலும் பரவக்கூடிய பேராபத்தான நிலை காணப்படுகின்றது.

எதிர்வரும் வார நாள்களில் கம்பஹா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். இதனைக் கருத்திற்கொண்டு நாட்டிலுள்ள அனைத்து மக்களும் மிகவும் பாதுகாப்பான முறையில் செயற்பட வேண்டும்.

கொரோனாத் தொற்று தொடர்பாக நாட்டின் அனைத்து மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். அடுத்த சில வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும்.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றானது ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. அத்தோடு எதிர்வரும் வார நாள்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்.

இதனிடையே, நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைப் போல், சுகாதார ஊழியர்களின் குடும்பங்களிடையே தொற்று நோய் பரவி வருகின்றது. அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குத் தடுப்பூசி போடுவதில் சுகாதார அமைச்சு முன்னுரிமை வழங்க வேண்டும் - என்றார்.




# கச்சான் விற்கும் மூதாட்டிகளின் தட்டுமுட்டுச் சாமான்களும் களவு

## நல்லூரில் திருடர்கள் கைவரிசை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,மே.19

நல்லூர் ஆலய சூழலில் வாழ்வாதாரத்திற்காகக் கச்சான் விற்பவர்களையும் இரும்புத் திருடர்கள் விட்டு வைக்கவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

நல்லூர் கந்தன் ஆலயத்தின் தெற்கு வீதியிலே இரு மூதாட்டிகளும் ஓர் பெண்மணியும் நீண்டகாலமாக கச்சான் விற்பனை செய்தே வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றனர். இவ்வாறு கச்சான் விற்பனை செய்பவர்கள் அருகில் உள்ள வங்கி ஒன்றின் முன்பாக உள்ள காணியிலேயே தமது கதிரை மேசையை வைத்துச் செல்வது வழமையாகும்.

இந்த நிலையிலே கடந்தவாரம் பயணத்தடை உள்ளிட்ட காரணங்களால் கச்சான் விற்பனையில் ஈடுபடாது நேற்றைய தினம் விற்பனைக்கு வந்தபோது மேசை கதிரைகளில் இருந்த பலகைகள் தூக்கி வீசப்பட்டு இரும்புகள், பிளாஸ்டிக் மட்டும் களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

இவ்வாறு களவாடப்பட்ட தளபாடங்களின் பெறுமதி 10 ஆயிரத்தில் இருந்து 13 ஆயிரம் ரூபா வரை இருக்கும் என்றும் இதனால் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் கச்சான் விற்பனையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

# நினைவேந்தல் செய்த எண்மர் கல்குடா பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு - கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபட்டிருந்த எட்டுப்பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாத இயக்கத்தைப் புனரமைக்கும் செயல் திட்டத்தில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரைக்கமைவாக கல்குடா பொலிஸாருடன் ஏறாவூர்ப் பொலிஸ் குழுவினரும் இணைந்து இச்சுற்றிவளைப்பு நடவடிக்கையைச் செய்துள்ளனர்.

இவர்கள் தீபச்சுடர் ஏற்றி நினைவேந்தல் செய்த பின்னர் கடலில் மலர்த்தட்டு பூஜை செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கைதுசெய்யப்பட்ட இவர்கள் மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

வெளிநாட்டு 'டயஸ்போராக்களின்' நிதியுதவியுடன் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் முக்கியஸ்தரான விபுலசேன லவக்குமார் என்பவரின் தலைமையில் இந்நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றுள்ளது என்றும் -

இந்நபர் உட்பட எட்டுப்பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும்-

ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்த தெரிவித்தார்.

# மட்டு. புதுக்குடியிருப்பு விபத்தில் ஒருவர் சாவு!



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிரிழந்துள்ளார். புதுக்குடியிருப்பு பெற்றோல் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் புதுக்குடியிருப்பு ஐந்தாம் வட்டாரத்தினைச் சேர்ந்த ராஜேஸ்வரன் ரஞ்சித்(55வயது) என்பவரே உயிரிழந்துள்ளார். இதன்போது காரில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளை கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கார் மோதியுள்ளது.இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாணவர்களால் ஏற்றப்பட்ட சுடரினை காலினால் தட்டி அகற்றிய காவலாளி

## யாழ்.பல்கலையில் சம்பவம்

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்றப்பட்ட சுடரை பல்கலைக்கழக காவலாளி, காலால் தட்டி அகற்றியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் முன்பாக, மாணவர்களால் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இதன்போது பல்கலைக்கழக காவலாளி மாணவர்களினால் ஏற்றப்பட்ட சுடரைக் காலால் தட்டி அகற்றியுள்ளார்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்த மாணவர்கள், இந்த செயற்பாடு எமது இறந்த உறவுகளை அவமதிக்கும் செயலாகும் என கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த திங்கட்கிழமை; பல்கலைக் கழகத்திற்குள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறாமல் தடுக்கும் வகையில் இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வு பிரிவினர் அவ்விடத்தில் குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் குறித்த தடைகளை மீறி மாணவர்கள் பல்கலை வளாகத்தினுள் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2021 இல் வெளியிடப்பெற்றது.